29 ஜனவரி 2023
(மறைக்கல்வி ஞாயிறு)

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 4 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: **ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்: **கல்வி**

## நம்பிக்கைக் கொண்ட குடும்பங்களோடு திருஅவையைப் புதுப்பித்தல்

இ இன்றையக் காலக்கட்டத்தில் நவீன குடும்பங்கள் நம்பிக்கையில் வளர்வதற்கு அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் உண்மை நிலவரங்கள் மிகவும் கடினமாக உள்ளது. இன்றைய சமூக மற்றும் கலாச்சாரப் போக்குகள், தனிமனிதப்போக்கு, நாத்திகம், பன்மைத்துவம் மற்றும் உடனடி மனநிறைவு ஆகியவற்றை நோக்கிச் சுட்டிக்காட்டுகின்றன. இவை அனைத்தும் கிறிஸ்தவ குடும்பத்திற்கு சவால் விடுக்கின்றன.



மனனம் செய்ய இந்த வார வசனம்:

**நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு; முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்.**

(நீதிமொழிகள் 22: 6)

**இன்றைய வாசகங்கள்:**

செப்போனியா 2: 3, 3: 12-13;

திருப்பாடல்: 146: 6-10;

1 கொரிந்தியர் 1: 26-31;

மத்தேயு: 5: 1-12

திருஅவையில் நம்முடைய மறைக்கல்வி வகுப்புகள் இளைஞர்களால் நிரம்பியுள்ளன. அவர்களில் பலர் தங்களுடைய முதல் நற்கருணை அருளடையாளக் கொண்டாட்டத்திற்குத் தங்களைத் தயாரித்து வருகின்றனர். பெரும்பாலும் இதற்கடுத்த ஆண்டுகளில் இந்த வருகை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துகொண்டே வருகின்றது. அதன்பிறகு உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக்கொண்டபின் பல இளைஞர்கள் ஆலயத்திற்கு வருவதே இல்லை.

அவர்கள் ஏன் திரும்பிவருவதில்லை? ஏன் வெகுசிலர் மட்டுமே ஆலயத்திற்கு வருவதும், இளைஞர்கள் குழுவிலும், பணிக்குழுக்களிலும் தவறாது ஈடுபடுகிறார்கள்? நம் ஆலயங்களில் நடைபெறும் மறைக்கல்வி வகுப்புகள், நம்பிக்கை உருவாக்கப் பயிற்சிகள், இளைஞர் நிகழ்ச்சிகள், விவிலிய முகாம், தியானங்கள், இளைஞர் பேரணிகள் இவை அனைத்தும் இளைஞர்களுக்கு மட்டுமே என்னும் எண்ணம் பெற்றோர்களுக்கு இருப்பதால் அவர்களை தேவாலயத்தில் விட்டுச் செல்வதோடு, அருள்பணியாளர்களும், மறைபோதக ஆசிரியர்களும், அவர்களை ஒழுக்கத்தில் வளர்ப்பார்கள் என்று பெற்றோர்கள் எண்ணுகிறார்கள்.

இருப்பினும், சீடத்துவத்தை உருவாக்கும் நம்முடைய முயற்சிகள் நாம் எதிர்ப்பார்க்கும் நேர்மறையான பலனைவிட குறைவாகத் தருவதாகத்தான் தெரிகிறது. இது குடும்பங்களும் பெற்றோரும் தங்களுக்குரிய பங்கைச் செய்யவில்லை என்ற முடிவுக்கு வரவைக்கிறது. அல்லது இதுபோன்று நடப்பதற்கு, நாம் தான் காரணமா? குடும்பங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் நிலவும் சவால்களை எதிர்கொள்ளவும், ஆதரவளிப்பதற்கும், இல்லங்களில் நம்பிக்கையை ஆய்ந்துப் பார்ப்பதில் குடும்பங்கள் வலுவான அர்ப்பணிப்பை மேற்கொள்வதற்கும் நம்முடைய உறுதிப்பாட்டை உயர்த்தவேண்டிய நேரம் இது. குடும்பங்கள் நம்பிக்கையை வளர்ப்பதற்கு நாம் விரும்புவதை எதிர்பார்க்கும் ஒன்றிலிருந்து எதிர்ப்பார்க்கப்பட ஒன்றிற்காக மாறவேண்டும். அசாதரானமான ஒன்றை எதிர்ப்பார்ப்பதிலிருந்து சாதாரனமான ஒன்றுக்கு மாறவேண்டும்.

இறுதியாக, திருஅவையில் புதுப்பித்தல் என்பது கடவுளின் செயலே. இருப்பினும் அவர் நம் வழியாகச் செயல்படுகிறார். இந்தச் சலுகையும் சவாலும் நம்மைச் சார்ந்தது. எப்போதும் விழிப்பாயும், நம்பிக்கையில் நிலைத்திருந்து, துணிவோடும், வலிமையோடும் இருக்க வேண்டும். (1 கொரி:16: 13-14) நம்பிக்கைக் கொண்டுள்ள குடும்பங்களோடு திருஅவையைப் புதுப்பித்தல் என்பது, மக்கள் தொடர்பில் இருப்பது மட்டுமல்ல; ஒற்றுமையிலும் இயேசு கிறிஸ்துவோடு நெருக்கமாய் இருப்பதும் தான் உண்மையான நிச்சயமான மறைபோதகத்தின் நோக்கம். கிறிஸ்து ஒருவர் மட்டுமே தூய ஆவியாரில் தந்தையின் அன்பை நோக்கியும் ஆவியின் வாழ்வில் பங்குகொள்ளவும், நம்மை வழிநடத்திச் செல்ல இயலும். (Catechesi Tradendae 5).

*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 05/2023